நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர, வேறு யாராலும் தடுக்க முடியாது









# Physics Study Material





***ஆக்கம் :***

***மீனா.மேகநாதன் M.Sc., B.Ed., M.Phil., பட்டதாரி ஆசிரியர்***

***அரசு மேல்நிலைப் பள்ளி, புலிவலம்***

***மீனா.சாமிநாதன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர்.***

***இரா.நவநீதகிருஷ்ணன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர்,***

***அரசு உயர்நிலைப் பள்ளி, பழையவலம்.***

***திருவாரூர் மாவட்டம்***

# அண்டத் தொகுதி

- வான்பொருள்களின் இயக்கங்கள், இருப்பிடங்கள் மற்றும் அவற்றின் ஆக்கக் கூறுகள் (Composition) போன்றவற்றை அறியும் அறிவியலின் பிரிவு வானவியல் (Astronomy) எனப்படும்.

## ❖ பேரண்டம் (Universe) :

- பல கோடிக்கணக்கான விண்மீன்களின் தொகுதியே அண்டம் எனப்படும். பல கோடிக்கணக்கான அண்டங்களைக் கொண்ட தொகுதியே பேரண்டமாகும். இத்தகைய பேரண்டத்தில் காணப்படும் பல்வேறு அண்டங்களில் ஒன்று பால்வெளி அண்டம் (Milkyway Galaxy) ஆகும்.
- பால்வழித்திரள் (Milkyway) எனப்படும் நமது விண்மீன்திரளில் (Galaxy) இருக்கக்கூடிய நூறு பில்லியன் விண்மீன்களில் சூரியனும் ஒன்று. புவிக்கு மிக அருகில் உள்ள விண்மீன் சூரியன்.
- ஒரு விண்மீன் என்பது ஈர்ப்பு விசையினால் பிணைக்கப்பட்ட ஹைட்ரஜன், ஹீலியம் கொண்ட மிகப்பெரிய பந்து போன்றதாகும்.
- புவி மேற்கிலிருந்து கிழக்காக சுழல்வதால் சூரியன் தோன்றுவதும் மறைவதும் நிகழ்கிறது. இருப்பினும் வானத்தில் ஒரே ஒரு விண்மீன் மட்டும் நிலையாக இருப்பது போல தோன்றுகிறது. இந்த விண்மீன் துருவ விண்மீன்கள் அல்லது போலாரிஸ் எனப்படும்.
- சூரியன் ஒரு விண்மீன். சூரியனை போன்று பல பில்லியன் விண்மீன்கள் உள்ளன.
- பில்லியன் விண்மீன்கள் இருக்கும் கூட்டத்தை விண்மீன் திரள் என்கிறோம்.
- நம் விண்மீன் திரள் பால்வழித்திரள் எனப்படுவதாகும்.
- பில்லியன் விண்மீன் திரள் சேர்ந்தே இந்த அண்டம் ஆகும்.
- சூரியன், சந்திரன், கோள்கள், விண்மீன்கள் போன்ற வான்பொருள்கள் அண்டத் தொகுதியின் பகுதிகளாகும்.
- அண்டங்களின் 3 வகைகள் : 1. விரிசுருள் 2. நீள்வட்ட 3. ஒழுங்கற்ற
- புவிக்கு மிக அருகாமையில் உள்ள விண்மீன் திரள் ஆண்ட்ரோமேடா. இது நமது அண்டத்தில் இருந்து $2\times10^6$ ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.
- புவியின் வட அரைக்கோளப் பகுதியில் வசிக்கும் மக்கள் ஆண்ட்ரோமேடா விண்மீன் திரளினைப் பார்க்க முடியும்.
- புவியின் தென் அரைக்கோளப் பகுதியில் வசிக்கும் மக்கள் மேக்னல்லானிக் முகில்களைப் பார்க்க முடியும்.

www.Kanchikalvi.com

## ❖ சூரிய குடும்பம் (Solar System) :

- சூரியனும், அதனைச் சுற்றிவரும் அனைத்துப் பொருள்களும் சேர்ந்து இருக்கும் அமைப்பு சூரிய குடும்பம் எனப்படும். சூரியன் மட்டுமே ஒளியை உமிழ்கிறது.மற்றவை (நிலவு உட்பட) ஒளியை எதிரொளிக்கின்றன.
- பூமிக்கு அருகில் உள்ள விண்மீன் சூரியன். சூரியனும் பிற விண்மீன்களும் வானத்தில் கிழக்கில் தோன்றி மேற்கில் மறைவது போல் நமக்குத் தோன்றுகின்றன.
- சூரியனின் உட்பகுதிக்கு ஒளிக்கோளம் என்று பெயர், வெளிப்பகுதிக்கு நிறக்கோளம் என்று பெயர்.
- விண்மீன்களின் தொலைவு ஒளி ஆண்டினைக் கொண்டு அளவிடப்படுகிறது.வாணியல் தொலைவிற்கான அலகு ஒளி ஆண்டு ஆகும்.
- புவியிலிருந்து சூரியனின் தொலைவு $1.496\times10^8$ கி.மீ (1 AU = $1.496\times10^8$ கி.மீ )
- சூரியனிலிருந்து புவியை வந்தடைய ஒளி எடுத்துக் கொள்ளும் காலம் 8 நிமிடம் 20 விநாடி (500வி).
- சூரியனுக்கு அடுத்து புவிக்கு அருகாமையில் உள்ள விண்மீன் ஆல்பா சென்டாரி ஆகும். இது ஏறக்குறைய 4.3 ஒளி ஆண்டு தொலைவில் உள்ளது.
- சூரிய குடும்பத்தில் 8 கோள்கள் உள்ளன, நிலவுகள், சிறுகோள்கள்,வால்மீன்கள் அனைத்தும் சூரியனைச் சுற்றி வருகின்றன.
- 8 கோள்கள் புதன்,வெள்ளி,புவி,செவ்வாய்,வியாழன்,சனி,யுரேனஸ்,நெப்டியூன்.
- புதன்,வெள்ளி,புவி,செவ்வாய் ஆகிய நான்கும் திடக்கோள்களாகும்.
- வியாழன்,சனி,யுரேனஸ்,நெப்டியூன் ஆகிய நான்கும் வாயுக்கோள்களாகும்.
- தொலைநோக்கி போன்ற கருவிகள் இல்லாமல், வெறும் கண்களால் புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி ஆகிய ஐந்து கோள்களை மட்டுமே பார்க்க முடியும்.
- யுரனேஸ்,நெப்டியூன் ஆகிய கோள்களைத் தொலைநோக்கியால் மட்டுமே காண இயலும்.

ஆக்கம் : மீனா.சாமிநாதன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர். இரா.நவநீதகிருஷ்ணன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பழையவலம்.
மீனா.மேகநாதன் M.Sc.,B.Ed.,M.Phil., பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, புலிவலம். திருவாரூர் மாவட்டம். அலைபேசி-9095484620

- புதன்,வெள்ளி ஆகிய கோள்கள் சூரிய உதயத்திற்குச் சற்று முன்பும் மாலையில் மறைந்த பின்பும் புலப்படும்.
- தொலைநோக்கி வழியே பார்த்தால், சனிக்கோளைச் சுற்றி வளையம் போன்ற அமைப்பு காணப்படும். நுண்கற்களும்,தூசும்,பனியும் கொண்ட தொகுதியே இந்த வளையம். சனியின் வளையம் தான் எடுப்பானது என்றாலும் வியாழன்,யுரேனஸ்,நெப்டியூன் ஆகிய கோள்களுக்கும் வளையங்கள் உண்டு.

❖ <u>துணைக்கோள் (Moon)</u> :

- கோள் ஒன்றினைச் சுற்றி வரும் சிறு பொருளினை நிலவு என்கிறோம். புதன், வெள்ளி தவிர அனைத்து கோள்களுக்கும் நிலவு உண்டு.
- பூமிக்கு சந்திரன் துணைக்கோளாக உள்ளது. சந்திரன் பூமியைச் சுற்றிவர ஏறத்தாழ 27.3 நாள்கள் எடுத்துக் கொள்கிறது.
- பூமியிலிருந்து பார்த்தால் சந்திரனின் ஒரு பக்கம் மட்டுமே தெரிகிறது. சந்திரனின் மறுபக்கத்தை லூனா-3 என்ற செயற்கைக்கோள்தான் 1959 ல் முதன் முதலில் புகைப்படம் எடுத்தது.

❖ <u>சிறு கோள்கள் (Dwarf Planets)</u> :

- புளூட்டோ, செரஸ், ஏரிஸ், மேக்மேக், ஹவ்மீயே முதலியன 2006 ம் ஆண்டு குள்ளக்கோள்கள் என புதியதாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவையும் சூரியனைச் சுற்றி வருகின்றன. இவை அளவில் மிகச் சிறியவை.சந்திரனைவிடச் சிறியவை. எனவேதான், இவை குள்ளக்கோள்கள் எனப்படுகின்றன.

❖ <u>குறுங்கோள்கள் (Asteroids)</u> :

- செவ்வாய்க் கோளுக்கும் வியாழன் கோளுக்கும் இடையில் இலட்சக்கணக்கான குறுங்கோள்கள் உள்ளன.
- இந்திய வானவியல் அறிஞர் வைணுபாப்பு, அணுசக்தித் துறையின் தந்தை சாராபாய், கணிதமேதை இராமானுஜம் ஆகியோரின் பெயர்களில் சில குறுங்கோள்கள் உள்ளன.

❖ <u>ஒளி ஆண்டு</u> :

- ஒளியானது வெற்றிடத்தில் ஓர் ஆண்டில் செல்லக்கூடிய தொலைவு ஒளி ஆண்டு எனப்படும். 1 ஒளி ஆண்டு=$9.467\times10^{15}$ m

❖ <u>வானியல் அலகு</u> :

- புவியின் மையத்திற்கும் சூரியனின் மையத்திற்கும் இடையே உள்ள சராசரி தொலைவு வானியல் அலகு எனப்படும். 1 வானியல் அலகு (AU) = $1.496\times10^{11}$ m

www.Kanchikalvi.com

❖ <u>கோள்கள்(Planets)</u> :

| கோள் | சூரியனைச் சுழன்றவாறு சுற்றிவரும் காலம் | சூரியனிடமிருந்து தொலைவு | கோளின் தற்சுழற்சிக் காலம் | துணைக்கோள்கள் |
|---|---|---|---|---|
| புதன் | 87.97 நாள்கள் | 5.97 கோடி கி.மீ | 58.6 நாள்கள் | 0 |
| வெள்ளி | 224.7 நாள்கள் | 10.82 கோடி கி.மீ | 243 நாள்கள் | 0 |
| புவி | 365 ¼ நாள்கள் | 15 கோடி கி.மீ | 23 மணி 56 நிமிடங்கள் | 1 |
| செவ்வாய் | 687 நாள்கள் | 22.79 கோடி கி.மீ | 24 மணி 37 நிமிடங்கள் | 2 |
| வியாழன் | 11 ஆண்டுகள்10மாதங்கள் | 77.83 கோடி கி.மீ | 9 மணி 55 நிமிடங்கள் | 63 |
| சனி | 29ஆண்டுகள் 5மாதங்கள் | 142.7 கோடி கி.மீ | 10 மணி 40 நிமிடங்கள் | 60 |
| யுரேனஸ் | 84 ஆண்டுகள் | 287.1 கோடி கி.மீ | 17 மணி 14 நிமிடங்கள் | 27 |
| நெப்டியூன் | 164ஆண்டுகள் 9மாதங்கள் | 449.7 கோடி கி.மீ | 16 மணி | 13 |

- வெள்ளி மற்றும் யுரேனஸ் கோள்கள் தற்சுழற்சியில் கிழக்கிலிருந்து மேற்காகச் சுற்றுகின்றன. ஆனால் மற்ற அனைத்துக் கோள்களும் தற்சுழற்சியில் மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றுகின்றன.வெள்ளி பூமியின் இரட்டைப் பிறவி.
- வியாழன் மிகப் பெரிய கோள். சனி இரண்டாவது மிகப்பெரிய கோள்.
- சனி கோளினை முதன் முதலில் 1610 ல் கலிலியோ தொலைநோக்கியைக் கொண்டு உற்று நோக்கினார். சனிக் கோளில் மஞ்சள் நிறமாக பல வளையங்கள் உள்ளன.

ஆக்கம் : மீனா.சாமிநாதன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர். இரா.நவநீதகிருஷ்ணன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பழையவலம்.
மீனா.செந்தில்நாதன் M.Sc.,B.Ed.,M.Phil., பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, புலிவலம். திருவாரூர் மாவட்டம். அலைபேசி-9095484620

- யுரேனஸ் பச்சை நிறத்துடன் காணப்படும்.
- கோள்களில் இயக்கம் பற்றிய கெப்ளர் விதிகள், நியூட்டனின் பொது ஈர்ப்பு விதிகள் கோள்கள் பற்றி அறிய உதவுகின்றன.
- இரவு பகலாக மாறும், பகல் இரவாக மாறும். ஏனெனில் புவியானது வடக்கு மற்றும் தெற்கு துருவங்கள் வழியே செல்லும் அச்சைப் பற்றி சுழல்கிறது.
- சுழலும் புவியின் அச்சு சூரிய ஒளியின் திசைக்கு செங்குத்தாக இருக்கும் போது பகல் நேரமும் இரவு நேரமும் சமமாக இருக்கும்.
- மார்ச் 21 மற்றும் செப்டம்பர் 21 தேதிகளில் மட்டும் பகல் நேரமும் இரவு நேரமும் சமமாக இருக்கும்.
- கோடைக்காலத்தில் பகல் நேரம் அதிகமாக இருக்கும். சூரியன் வடகிழக்கில் உதித்து வட மேற்கில் மறையும்.
- குளிர் காலத்தில் பகல் நேரத்தை விட இரவு நேரம் அதிகமாக இருக்கும். சூரியன் தென்கிழக்கில் உதித்து தென் மேற்கில் மறையும். இவ்வாறு ஏற்படக் காரணம் புவியின் சுழலும் அச்சு சூரிய ஒளியின் திசைக்கு 90° கோணத்தி இருப்பது இல்லை.

❖ <u>விண்மீன் குழுக்கள் (Constellations)</u> :

- ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் விண்மீன்கள் இருப்பதை விண்மீன் குழுக்கள் என்கிறோம்.
- உர்சா மேஜர் (சப்தரிசி), உர்சாமைனர் (லாகு சப்தரிசி), ஓரியான் (மிரிகா) போன்றவை எளிதாக அடையாளம் கொள்ளக்கூடிய விண்மீன் குழுக்களாகும்.
- உர்சா மேஜரில் உள்ள 7 முக்கிய விண்மீன்கள் ஏர் போன்ற அமைப்பினை ஏற்படுத்துகின்றன. இது பெரிய அகப்பை, பெருங்கரடி அல்லது சப்தரிசி என்றும் அழைக்கப்படுகிறது.
- ஓரியான் குளிர் காலங்களில் வடதிசையிலும், கோடைக் காலங்களில் தென் திசையிலும் தோன்றும் வேட்டைக்காரன் தோற்றம்.

❖ <u>வால்மீன் (Comets)</u> :

- நீர்,அம்மோனியா, மீத்தேன் போன்றவற்றால் சூழப்பட்ட பனி,தூசு நிறைந்த பனிப்பாறை போன்றது வால்மீன் ஆகும்.
- வால்விண்மீன் மிகச்சிறிய பருமனைக் கொண்ட வான்பொருளாகும். திட நிலையில் உள்ள வாயுவால் சூழப்பட்ட திடப்பொருள் வால்மீன் எனப்படும்.
- வால்மீன், சூரியனை நெருங்கும் போது சூரிய கதிர்வீச்சு ஆற்றல் காரணமாக வெப்பப்படுத்தப்பட்டு ஆவியாகி ஏறத்தாழ 10000 கி.மீ விட்டமுடைய தலைப்பகுதி உருவாகிறது.
- வால்மீனில் தோன்றும் வால்பகுதி எப்போதும் சூரியனுக்கு எதிரான திசையிலேயே இருக்கும்.
- ஹாலி வால்மீன் 76 ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றும்.1910 ஆண்டும் 1886 ல் கடைசியாக பார்க்கப்பட்டது, மீண்டும் 2062 ல் நம்மால் பார்க்க முடியும்.

www.Kanchikalvi.com

❖ <u>கோள்களின் இயக்கம்</u> :

- கோள்களின் இயக்கம் பற்றிய முதல் கொள்கையான புவி-மையக் கொள்கையை கிரேக்க வானியலாளர் தாலமி உருவாக்கினார்.
- கணித வல்லுநரும் வானியலாளருமான ஆரியபட் என்பவர் புவி தனது அச்சில் சுழல்வதாகக் கூறினார்.
- போலந்து நாட்டு வானியலாளர், நிகாலஸ் கோபர்நிகஸ் என்பவர் சூரிய மையக் கொள்கையைக் கூறினார்.
- கோளின் இயக்கத்திற்கான எண்மான விதிகளை ஜெர்மன் நாட்டைச் சார்ந்த கெப்ளர் வகுத்தார்.அவை.
  1.சுற்றுப்பாதைகளின் விதி 2.பரப்புகளின் விதி 3.சுற்றுக்காலங்களின் விதி

  ✓ <u>சுற்றுப்பாதைகளின் விதி</u> : சூரியனை ஒரு குவியமாகக் கொண்டு ஒவ்வொரு கோளும் அதனை நீள்வட்டப் பாதையில் சுற்றி வருகிறது.

  ✓ <u>பரப்புகளின் விதி</u> : சூரியனையும் கோளினையும் இணைக்கும் கோடு( ஆர வெக்டர்) சமகால இடைவெளியில் சம பரப்புகளை ஏற்படுத்தும்.

  ✓ <u>சுற்றுக்காலங்களின் விதி</u> : சூரியனைச் சுற்றும் கோளின் சுற்றுக்காலங்களின் இருமடி, சூரியனுக்கும் அக்கோளிற்கும் இடையே உள்ள சராசரித் தொலைவின் மும்மடிக்கு நேர்த்தகவில் இருக்கும். அதாவது $T^2 \alpha r^3$. $T^2 / r^3$ = மாறிலி.

ஆக்கம் : மீனா.சாமிநாதன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர். இரா.நவநீதகிருஷ்ணன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பழையவலம்.
மீனா.மேகநாதன் M.Sc.,B.Ed.,M.Phil., பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, புலிவலம். திருவாரூர் மாவட்டம். அலைபேசி-9095484620

- **நியூட்டனின் பொது ஈர்ப்பியல் விதி** :
  - அண்டத்தில் உள்ள பருப்பொருளின் ஒவ்வொரு துகளும் மற்றொரு துகளை, அவற்றின் நிறைகளின் பெருக்கற்பலனுக்கு நேர்த்தகவிலும் அவற்றிற்கிடையேயுள்ள தொலைவின் இருமடிக்கு எதிர்த்தகவிலும் இருக்கும் விசையுடன் கவருகின்றன. $F \alpha m_1m_2$

    $F \alpha 1/r^2$

    $F \alpha m_1m_2 / r^2$

    $F = G m_1m_2 / r^2$
  - இங்கு G என்பது ஈர்ப்பியல் மாறிலி. G ன் மதிப்பு $6.67\times10^{-11}$ N $m^2$ $Kg^{-2}$. G-ன் பரிமாண வாய்பாடு $M^{-1} L^3 T^{-2}$.
- **புவியின் பரப்பில் ஈர்ப்பின் முடுக்கம்** :
  - பொருளின் மீதான ஈர்ப்பியல் விசை, $F = G Mm / R^2$
  - இங்கு m - பொருளின் நிறை M - புவியின் நிறை R -புவியின் ஆரம்.
  - நியூட்டனின் இரண்டாம் விதிப்படி,விசை , $F = mg$

    $\therefore mg = G Mm / R^2$

    $g = G M / R^2$
  - கடல் மட்டத்தில் 45° அட்சத்தில் உள்ள g-ன் மதிப்பு படித்தர (standard) மதிப்பாக கருதப்படுகிறது. அதாவது, $g = 9.8 ms^{-2}$.
- **புவியின் நிறை** :
  - $g= G M / R^2$ என்ற சமன்பாட்டில் இருந்து, புவியின் நிறையை கீழ்க்கண்டவாறு கணக்கிடலாம்.
  - $M = g R^2 / G$ $M = 9.8\times(6.38\times10^6)^2 / 6.67\times10^{-11}$ $\therefore M= 5.98\times10^{24}$ Kg
- **ஈர்ப்பின் முடுக்கம் மாறுபடுதல்** :
  - குத்துயரத்தைச் சார்ந்து மாறுபடுதல்- புவிப்பரப்பிற்கு மேல், உயரம் அதிகரிக்கும் போது ஈர்ப்பின் முடுக்கம் குறைகிறது.
  - ஆழம் அதிகரித்தால் ஈர்ப்பின் முடுக்கம் குறையும்.
  - துருவப் பகுதியில் g-ன் மதிப்பு பெருமம். நிலநடுக்கோட்டுப் பகுதியில் g - ன் மதிப்பு சிறுமம் .
  - நிலநடுக்கோட்டுப் பகுதியில் இருந்து துருவங்களுக்குச் செல்லும் போது g - ன் மதிப்பு அதிகரிக்கும்.
- **விடுபடு திசைவேகம்** :
  - கோளின் ஈர்ப்பியல் புலத்திலிருந்து விடுப்பட்டுத் தப்பிச் செல்லுமாறு, பொருள் எறியப்பட வேண்டிய சிறும வேகம் விடுபடு வேகம் எனப்படும்.
  - புவியில் விடுபடுவேகம் 11.2 Km/s ஆகும். புதன் கோளில் 4 Km/s ஆகவும்,வியாழன் கோளில் 60 Km/s ஆகவும், நிலவில் 2.5 Km/s ஆகவும் விடுபடு வேகங்களின் மதிப்புகள் கணக்கிடப்பட்டுள்ளன.
- **விண்வெளி ஆய்வுப் பயணம்** :
  - இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை டாக்டர்.விக்ரம் சாராபாய் ஆவார்
  - 1957 ஆண்டில் அப்போதைய சோவியத் ரஷ்யா (USSR) ஸ்புட்னிக் என்ற முதன் செயற்கைத் துணைக்கோள் செலுத்தியது.இதுவே முதல் விண்வெளி ஆய்வுப் பயணம்.
  - விண்வெளி ஆராய்ச்சிக்கான இந்திய தேசியக்குழு 1962 ல் ஏற்படுத்தப்பட்டது.
  - இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் 1969 ல் பெங்களூரில் ஏற்படுத்தப்பட்டது. 1980 ல் இந்திய தேசியச் செயற்கைக்கோள் மற்றும் இந்திய தொலைவுணர்வு செயற்கைக்கோள் வெற்றிகரமாக ஏவப்பட்டன.
  - தொடக்கத்தில் விண்வெளித் திட்டங்கள் அணு ஆற்றல் துறையினால் மேற்கொள்ளப்பட்டன. 1972 ம் ஆண்டு ஜீன் மாதம் விண்வெளித் துறையானது தனியாக நிறுவப்பட்டது.
  - விண்வெளித் துறையின் கீழ் இயங்கும் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (ISRO), விண்வெளித் திட்டங்களை இந்தியாவில் பல இடங்களில் உள்ள தனது அமைப்புகள் மூலமாக செயல்படுத்தி வருகிறது.
  - (தமிழ்நாட்டில் மகேந்திரகிரி, ஆந்திரப்பிரதேசத்தில் ஸ்ரீஹரிகோட்டா, கேரளத்தில் திருவனந்தபுரம், கர்நாடகாவில் பெங்களூர், குஜராத்தில் அகமதாபாத்)
  - இந்தியாவின் முதல் செயற்கைத் துணைக்கோளான ஆரியபட்டா 1975ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் தேதி செலுத்தப்பட்டது.

ஆக்கம் : மீனா.சாமிநாதன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர். இரா.நவநீதகிருஷ்ணன் M.Sc.,B.Ed., பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பழையவலம்.
மீனா.மகேந்திரன் M.Sc.,B.Ed.,M.Phil., பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, புலிவலம். திருவாரூர் மாவட்டம். அலைபேசி-9095484620

- சதிஸ்தவான் விண்வெளிமையம் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து (ஆந்திரபிரதேசம்) 2002 ம் ஆண்டு செப்டம்பர் 12 ல் METSAT யை PSLV யை வைத்து ஏவியது,
- METSAT (மெட்சாட்) க்கு கல்பனா-1 என பெயர் மாற்றப்பட்டது. வானிலை முன்னறிவிப்பிற்கு மெட்சாட் செயற்கைத் துணைக்கோள் பயன்படுகிறது.

❖ **இந்தியத் துணைக்கோள்கள்** :

- 1.ஆரியபட்டா- முதல் இந்தியத் துணைக்கோள்
- 2.பாஸ்கரா-1
- 3.ரோகொணி
- 4.ஆப்பிள் (APPLE-Ariane Passenger Pay Load Experiment)-இதுவே புவி-நிலைச் சுற்றுப்பாதையில் வைக்கப்பட்ட முதல் இந்திய செய்தித் தொடர்பு துணைக்கோள் ஆகும்.
- 5.பாஸ்கரா-2
- இன்சாட்(INSAT-Indian National Satellite)
- 7.SROSS (Stretched Rohini Satellite series)
- 8.IRS (Indian Remote Sensing Satellite)
- 9.METSAT (கல்பனா-1) வானிலை ஆய்விற்காக மட்டுமே அனுப்பப்பட்ட முதல் துணைக்கோள்.
- 10.GSAT-புவி நிலைத் துணைக்கோள்.

❖ **இந்திய ஏவு வாகணங்கள்** :

✓ திரவ ஹைட்ரஜன் பெருமளவில் இராக்கெட்டில் எரிபொருளாகப் பயன்படுகிறது.

✓ இராக்கெட் நியூட்டனின் மூன்றாம் விதி மற்றும் உந்த அழிவின்மை விதிப் படி செயல்படுகிறது.

- 1.SLV-3 (Satellite Launch Vehicle) இது இந்தியாவின் முதல் சோதனை முறையிலான துணைக்கோள் ஏவும் வாகணம் ஆகும்.
- 2.ASLV (Augmented Satellite Launch Vehicle)
- 3.PSLV (Polar Satellite Launch Vehicle)
- 4.GSLV (Geosynchronous Satellite Launch Vehicle)

❖ **இந்தியாவின் முதல் நிலவுப் பயணம்** :

www.Kanchikalvi.com

- சந்திராயன்-1 நிலவுப் பயணத்திற்கான ஒரு கலன்.
- நிலவுக்கு அனுப்பப்பட்ட முதல் ஆளில்லா நுண்ணாய்வி ஆகும்.
- 2008 ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆந்திர மாநிலத்திலுள்ள ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து ISRO ஆல் விண்ணில் ஏவப்பட்டது.இது 2009 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வரை செயல்பட்டது.
- சந்திராயன் 312 நாள்கள் விண்ணில் செயல்பட்டது.அப்போது திட்டமிடப்பட்ட இலக்குகளில் 95 சதவீதத்தை நிறைவு செய்தது.
- 75 நாள்களில் சந்திராயன் புகைப்படக் கருவி 40,000க்கும் மேற்பட்ட படங்களைப் புவிக்கு அனுப்பியது.
- புவியின் முழு வடிவத்தையும் முதன் முறையாகப் பதிவு செய்து அனுப்பியது.
- சந்திராயன் I மற்றும் சந்திராயன் II இவற்றின் திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை.

கல்வி அமுது http://kalviamuthu.blogspot.com கல்வி அமுது